தீத்து - முன்னுரை

காலமும் இடமும்

கிபி. 67 ஆம் ஆண்டில் பவுல் இந்த நிருபத்தை மக்கெதோனியாவிலிருந்து எழுதினார். (1தீமோ 1:3)

ஆசிரியர்

பவுல்.

மையக்கருத்து

போதக நிருபங்களில் தீத்து இரண்டாவது எழுதப்பட்ட நிருபமாகும். சபையின் ஆராதனை ஒழுங்குகள், உபதேசங்கள், கிறிஸ்தவரிடம் காணப்படவேண்டிய தகுதிகள் ஆகியவற்றை இந்த நிருபம் விளக்குகிறது. தீத்துவிற்கு எழுதப்பட்ட நிருபமும், 1தீமோத்தேயு நிருபமும் பல விஷயங்களில் ஒத்திருக்கின்றன. சபை ஒழுங்கு, ஆரோக்கியமான உபதேசம் ஆகியவற்றில் இவ்விரு நிருபங்களும் கவனம் செலுத்துகின்றன. விசுவாசத் துரோகமும், கள்ள உபதேசமும் உண்டாகும் காலங்களில் ஒரு விசுவாசி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் குறித்து 2தீமோத்தேயு நிருபம் விளக்குகிறது.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 3

வசனங்கள் - 46

புதிய தீர்க்கதரிசனம் - 1

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 45

பொருளடக்கம்

I. முன்னுரை - ஆசிரியரும் வாழ்த்துதலும் (1:1-4)

II. ஊழியக்காரரின் பதினேழு தகுதிகள் (1:5-9)

III. ஊழியக்காரரிடம் இருக்கக்கூடாத பதினேழு குணங்கள் (1:10-16)

IV. ஊழியம் செய்யுமாறு கட்டளைகள்

1. தீத்துவிற்கு முப்பது கட்டளைகள்
   - (1) முதிர் வயதுள்ள புருஷர்களுக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் (2:1-2)
   - (2) முதிர் வயதுள்ள ஸ்திரீகளுக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் (2:3)
   - (3) பாலிய ஸ்திரீகளுக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் (2:4-5)
   - (4) பாலிய புருஷருக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் (2:6-8)
   - (5) வேலைக்காரருக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் (2:9-10)
2. சுவிசேஷத்திற்கு எல்லா மனுஷரும் கீழ்ப்படிய வேண்டும் - தேவகிருபையைக் குறித்து பத்து உபதேசங்கள் (2:11-13)
3. கிறிஸ்துவின் ஊழியத்தின் நோக்கம் (2:14)
4. தீத்துவிற்கு பத்து கட்டளைகள் (2:15)
5. பாவிகளின் ஒன்பது அம்ச விளக்கம் (3:1-2)
6. மனுஷர் ஏன் எவ்வாறு இரட்சிக்கப் படுகிறார்கள் (3:3-7)
7. தீத்துவிற்கு எட்டு கட்டளைகள் (3:8-14)
8. முடிவுரையும் ஆசீர்வாதமும் (3:15)

தீத்து – தொகுப்புரை

1 அதிகாரம்

I. முன்னுரை - ஆசிரியரும் வாழ்த்துதலும் - (ரோமர் 1:1-4)

தீத்து 1:1 தேவனுடைய ஊழியக்காரனும், இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனுமாகிய பவுல், பொதுவான விசுவாசத்தின்படி உத்தம குமாரனாகிய தீத்துவுக்கு எழுதுகிறதாவது:

தீத்து 1:2 பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

தீத்து 1:3 பொய்யுரையாத தேவன் ஆதிகால முதல் நித்திய ஜீவனைக்குறித்து வாக்குத்தத்தம் பண்ணி, அதைக்குறித்த நம்பிக்கையைப்பற்றி தேவபக்திக் கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும் விசுவாசமும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு உண்டாகும்படி,

தீத்து 1:4 ஏற்றக்காலங்களிலே நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய கட்டளையின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்ட பிரசங்கத்தினாலே தமது வார்த்தையை வெளிப்படுத்தினார்.

"தேவனுடைய ஊழியக்காரன்" - இந்த வசனத்தில் மட்டுமே பவுல் தன்னைத் தேவனுடைய ஊழியக்காரனாகக் குறிப்பிடுகிறார். ரோமர் 1:1; பிலி 1:1 ஆகிய வசனங்களில் பவுல் தன்னை இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனாக அழைத்துக் கொள்கிறார்.

ஊழியக்காரன் (**servant**) - **δοῦλος** - **doulos** - 1401

பெயரடை- வேலைக்காரனாகிய, ஊழியக்காரனாகிய, அடிமையாயிருக்கிற **bondslave** (மத் 20:26-27)

"இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலன்" - (அப் 15:33)

"தீத்து" (Titus) - தீமோத்தேயுவைப் போல தீத்துவும் பவுலின் ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டவன். பவுலின் உடன் ஊழியக்காரன். (தீத்து 1:4; 2கொரி 2:13; 2கொரி 7:6-14; 2கொரி 8:23; 2கொரி 12:17-18; கலா 2:1-3). கிரேத்தா தீவிலே உள்ள சபைகளுக்குப் பவுல் இவனைப் பொறுப்பானவனாக நியமித்தார். (தீத்து 1:5).

"பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும்" - பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் தனித்தனியாக வெவ்வேறு ஆள்தத்துவப் பண்புடையவர்கள் என்பதை விளக்கும் வசனம்.

அப்போஸ்தல ஊழியத்தில் காணப்படும் காரியங்கள்

1. தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களுக்கு உண்டாயிருக்கும் விசுவாசம்.
2. தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவு.

விசுவாசம் (**faithfulness**) - **πίστις** - **pistis** - 4102

பெண்பால் பெயர்ச்சொல் - விசுவாசம், நிச்சயம், உண்மை (**faithfulness**) (2தெச 3:2)

அறிவு (**knowledge**) - **ἐπίγνωσις** - **epignoosis** - 1922

பெண்பால் பெயர்ச்சொல் - அறிவு, அறிந்துகொள்ளுதல், ஞானம் (**full knowledge**) (கொலோ 3:10) **of the truth which is after godliness** (தீத்து 1:1)

தீத்து - தொகுப்புரை

1 அதிகாரம்

"தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" **(God's elect)** - பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் யூதர்களைத் தம்முடைய ஜனமாகத் தெரிந்து கொண்டார். அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனதினால் தேவன் அவர்களைத் தள்ளிவிட்டு அவர்களுக்குப் பதிலாகத் தம்முடைய விசுவாசிகளைத் தம்முடைய ஜனமாகத் தெரிந்து கொண்டார். (மத் 21:43; மத் 23:37-39; லூக்கா 18:7, ரோமர் 9-11).

தேவபக்தி **(godliness)** - **εὐσέβεια** - **eusebeia** - 2150

பெண்பால் பெயர்ச்சொல் - பக்தி, தேவபக்தி **(piety)** (1தீமோ 3:16).

"நித்திய ஜீவனைக்குறித்த நம்பிக்கை" **(hope of eternal life)** - நித்திய ஜீவன் விசுவாசிகளுக்கு வாக்குத்தத்தம் பண்ணப் பட்டிருக்கும் ஆசீர்வாதம். நாம் மரித்த பின்பு நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வோம். ஆகையினால் இது ஒரு நம்பிக்கையே. (யோவான் 3:16,36; யோவான் 5:24; யோவான் 10:28-29, ரோமர் 8:24-25) நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு நாம் இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும். (1யோவான் 5:11-12; யோவான் 6:27, 15:1-8; கலா 1:6-8; கலா 4:19; கலா 5:4;

தேவனால் செய்ய முடியாத காரியங்கள்

1. பொய்யுரைக்க மாட்டார். (தீத்து 1:2)
2. தம்மைத்தாம் மறுதலிக்க மாட்டார். (2தீமோ 2:13)
3. தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப் படுகிறவர் அல்லர். (யாக் 1:13)

வாக்குத்தத்தம் பண்ணு **(promised)** - **ἐπαγγέλλομαι** - **epangellomai** - 1861

வினைச்சொல் - வாக்குத்தத்தம் பண்ணு, பாராட்டு, (ஒத்துக்கொள்) **(announce; command; give orders) "promise"** (தீத்து 1:2; மாற்கு 14:11; அப் 7:5; ரோமர் 4:21; கலா 3:19; எபி 6:13; எபி 10:23; எபி 11:11; எபி 12:26; யாக் 1:12; யாக் 2:5; 2பேதுரு 2:19; 1யோவான் 2:25) **"profess"** (1தீமோ 2:10; 1தீமோ 6:21).

"தேவன் ஆதிகால முதல் நித்திய ஜீவனைக்குறித்து வாக்குத்தத்தம் பண்ணினார்" - யாருக்கு இந்த வாக்குத்தத்தம் பண்ணினார் என்பது தெரியவில்லை. மனுஷர் சிருஷ்டிக்கப் படுவதற்கு முன்பாகவே அவர்களுக்குத் தேவன் நித்திய ஜீவனை வாக்குத்தத்தம் பண்ணினாரா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. ஆதிகால முதலே மனுஷரை மீட்டு அவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்க வேண்டும் என்னும் திட்டம் தேவனிடத்தில் இருந்தது. ஆதாமின் காலத்திற்கு முன்பாகவே தேவன் மனுக்குலத்திற்கு நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம் பண்ணியிருந்திருக்க வேண்டும். (ஆதி 1:1-2; ஏசா 14:12-14; எரே 4:23-26; எசே 28:11-17; மத் 13:35, 2பேதுரு 3:5-8) நித்திய ஜீவனைப் பற்றிய அறிவிப்பும் வாக்குத்தத்தமும் நமது காலத்தில் மிகவும் தெளிவாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. (தீத்து 1:3; எபே 1:4; எபே 3:1-6)

காலம் **(ages of time)** - **χρόνος** - **chronos** - 5550

ஆண்பால் பெயர்ச்சொல் - காலம் **(ages of time)** (தீத்து 1:2; 2தீமோ 1:9; ரோமர் 16:25).

நித்திய **(eternity)** - **αἰώνιος** - **aioonios** - 166

பெயரடை - நித்திய **"eternal", "everlasting"**

(அ) துவக்கமோ அல்லது முடிவோ அல்லாத, அநாதி ரோம. 16:25

(ஆ) துவக்கம் இல்லாத ரோம. 14:25

(இ) முடிவு இல்லாத

தீத்து - தொகுப்புரை

1 அதிகாரம்

அஸ்திபாரம் (disruption) - καταβολή - katabolee - 2602

பெண்பால் பெயர்ச்சொல் - தோற்றம், உண்டாதல், அஸ்திபாரம் (disruption, overthrow of the world) (மத் 13:35)

அஸ்திபாரம் (founding) - θεμέλιον - themelion - 2310

பெயர்ச்சொல் - ஆதாரம், அஸ்திபாரம்

"எனக்கு ஒப்புவிக்கப்பட்ட பிரசங்கம்" - பவுலின் ஊழியம். (அப் 9:15-17; கலா 1:15-16; கலா 2:2).

கட்டளை (commandment) - ἐπιταγή - epitagee - 2003

பெண்பால் பெயர்ச்சொல் - கட்டளை, அதிகாரம் (1தீமோ 1:1).

II. ஊழியக்காரரின் பதினேழு தகுதிகள் - (1தீமோ 3:1-13)

தீத்து 1:5 நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தாதீவிலே விட்டு வந்தேனே.

தீத்து 1:6 குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியையுடைய புருஷனும், துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவனிருந்தால் அவனையே ஏற்படுத்தலாம்.

தீத்து 1:7 ஏனெனில், கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்ற விதமாய், குற்றஞ்சாட்டப்படாதவனும், தன் இஷ்டப்படி செய்யாதவனும், முற்கோபமில்லாதவனும், மதுபானப் பிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும்,

தீத்து 1:8 அந்நியரை உபசரிக்கிறவனும், நல்லோர்மேல் பிரியமுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக்கமுள்ளவனும்,

தீத்து 1:9 ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்.

"கிரேத்தாதீவு" (Crete) - ஆகியான் கடலிலுள்ளது (Aegean Sea). இது 140 மைல் நீளமும், 30மைல் அகலமும் கொண்டது. அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகம் எழுதப்பட்ட பின்பு கிரேத்தாதீவில் பவுல் சபைகளை ஸ்தாபித்தார். ஏனெனில் கிரேத்தா தீவைப் பற்றிய குறிப்பு அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில் காணப்படவில்லை. பவுல் சிறிது காலம் சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்டிருந்தார். அக்காலத்தில் அவர் கிரேத்தா தீவிற்குச் சென்று சபையை ஸ்தாபித்தார்.

ஏற்படுத்து (ordain) - καθιστάνω - kathistanoo - 2525

வினைச்சொல் - வை, ஏற்படுத்து, வழிநடத்து, நியமி, ஆக்கு "ordain" (தீத்து 1:5; எபி 5:1; எபி 8:3); "appoint" (அப் 6:3); "conduct" (அப் 17:15); "set" (எபி 2:7); "make ruler" (மத் 24:45-47; மத் 25:21-23; லூக்கா12:42-44); "make" (லூக்கா 12:14; அப் 7:10,27,35; ரோமர் 5:19; எபி 7:28; 2பேதுரு 1:8).

தீத்து - தொகுப்புரை

1 அதிகாரம்

மூப்பர் (elders) - πρεσβύτερος - **presbyteros** - 4245

பெயரடை - முன்னோரான, மூப்பரான, முதிர் வயதுள்ள அப் 14:23).

கட்டளையிடு (appointed) - διατάσσω - **diatassoo** - 1299

வினைச்சொல் - கட்டளையிடு, கட்டளை கொடு, திட்டம் பண்ணு **"appoint"** (தீத்து 1:5; லூக்கா 3:13; அப் 7:44; அப் 20:13); **"ordain"** (1கொரி 7:17; 1கொரி 9:14; கலா 3:19); **"give order"** (1கொரி 16:1); **"command"** (மத் 11:1; லூக்கா 8:55; லூக்கா 17:9-10; அப் 18:2; அப் 23:31; அப் 24:23); **"set in order"** (1கொரி 11:34).

மூப்பருடைய தகுதிகள்

1. குற்றஞ்சாட்டப்படாதவன். (Blameless)
2. ஒரே மனைவியையுடைய புருஷன். (Husband of one wife) (2கொரி 9:5).
3. துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவன். (Having faithful children) (தீத்து 1:6; 1தீமோ 3:4-5,12).
4. தன் இஷ்டப்படி செய்யாதவன். (Not self-willed) (தீத்து 1:7).
5. முற்கோபமில்லாதவன் (Not soon angry) (தீத்து 1:7).
6. மதுபானப்பிரியமில்லாதவன். (Not given to wine) (தீத்து 1:7).
7. அடியாதவன். (No striker) (தீத்து 1:7).
8. இழிவான ஆதாயத்தை இச்சியாதவன். (Not given to filthy lucre) (தீத்து 1:7)
9. அந்நியரை உபசரிக்கிறவன். (A lover of hospitality) (தீத்து 1:8).
10. நல்லோர்மேல் பிரியமுள்ளவன். (A lover of good men) (தீத்து 1:8).
11. தெளிந்த புத்தியுள்ளவன். (Sober) (தீத்து 1:8).
12. நீதிமான். (Just) (தீத்து 1:8).
13. பரிசுத்தவான். (Holy) (தீத்து 1:8).
14. இச்சையடக்கமுள்ளவன் (Temperate) (தீத்து 1:8).
15. உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவன். (Holding fast to sound doctrine) (தீத்து 1:9).
16. ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவன். (Able to exhort believers, and convince the gainsayers) (தீத்து 1:9, 1தீமோ 3:2,8).

குற்றம் சாட்டப்படாதவன் (Blameless) - ἀνέγκλητος - **anenkleetos** - 410

பெயரடை - குற்றம் சாட்டப்படாத, கண்டிக்கப்படாத (blameless) (தீத்து 1:6-7; 1கொரி 1:8; 1தீமோ 3:10); (unreproveable) (கொலோ 1:22).

தன் இஷ்டப்படி செய்கிறவன் (stubborn) - αὐθάδης - **authadees** - 829

தீத்து - தொகுப்புரை

1 அதிகாரம்

பெயரடை - தன் இஷ்டப்படி செய்யும், அகங்கார (stubborn; headstrong; unfeeling; selfwilled) (தீத்து 1:6, 2பேதுரு 2:10)

முற்கோபமில்லாதவன் (Not soon angry) - ὀργίλος - orgilos - 3711

பெயரடை - கோபமில்லாத (prone to anger; hot-headed; passionate)

மதுபானப்பிரியன் (winebibber) - πάροινος - paroinos - 3943

பெயரடை - மதுபானப் பிரியனாயிருக்கிற (1தீமோ 3:3, தீத்து 1:6)

அடிக்கிறவன் (striker) - πλήκτης - pleektees - 4131

ஆண்பால் பெயர்ச்சொல் - அடிக்கிறவன் (quarrelsome; one ready to strike back at those who displease him; persecutor of those who differ with him) (1தீமோ 3:3, தீத்து 1:6)

இழிவான ஆதாயம் (filthy lucre) - αἰσχροκερδής - aischro kerdees - 146

பெயரடை - இழிவான ஆதாயத்தை இச்சிக்கிற (desirous of base gain; using wrong methods to raise money to increase his own income) (தீத்து 1:7; 1தீமோ 3:3,8).

அந்நியரை உபசரிக்கிறவன் (lover of) - φιλόξενος - philoxenos - 5382

பெயரடை - உபசரிக்கிறவன் (lover of strangers) (தீத்து 1:8; 1தீமோ 3:2; 1பேதுரு 4:9; ரோமர் 12:13).

நல்லோர்மேல் பிரியமுள்ளவன் (lover of goodness) - φιλάγαθος - philagathos - 5358

பெயரடை - பிரியமுள்ள (lover of goodness)

தெளிந்த புத்தியுள்ளவன் (Sober) - σώφρων - soophroon - 4998

பெயரடை - தெளிந்த புத்தியுள்ள (of sound mind; prudent; moderate; self-controlled) sober (தீத்து 1:8; 1தீமோ 3:2); temperate (தீத்து 2:2); discreet (தீத்து 2:5).

நீதிமான் (Just) - δικαιος - dikaios - 1342

பெயரடை - நீதிமானாயிருக்கிற, நீதியுள்ள, நியாயமான, உண்மையுள்ள (just, righteous, right , meet)

பரிசுத்தவான் (Holy) - ὅσιος - hosios - 3741

பெயரடை - பரிசுத்தமான, கிருபையான holy (தீத்து 1:8; 1தீமோ 2:8; எபி 7:26; வெளி 15:4); mercies (அப் 13:34); Holy One (அப் 2:27; அப் 13:35).

இச்சையடக்கமுள்ளவன் (Temperate) - ἐγκρατής - enkrtees - 1468

பெயரடை - இச்சையடக்கமுள்ள (having control of oneself; self- disciplined)

பற்றிக்கொள்ளுகிறவன் ἀντέχω - antechoo - 472

வினைச்சொல் - பற்று, தாங்கு (1தெச 5:14)

தீத்து - தொகுப்புரை

1 அதிகாரம்

"துன்மார்க்கரென்றும் அடங்காதவர் களென்றும் பேரெடுக் காத விசுவாசமுள்ள பிள்ளைகள்" - ஊழியக்காரர்களுடைய பிள்ளைகளுக்கு இப்பேர்ப்பட்ட தகுதிகள் இருக்க வேண்டும்.

கண்காணி (bishop) - ἐπίσκοπος - episkopos - 1985

ஆண்பால் பெயர்ச்சொல் - கண்காணிப்பானவன், கண்காணி (அப் 20:28).

எதிர்பேசுகிறவர் (gainsayers) - ἀντιλέγω - antilegoo - 483

வினைச்சொல் - விரோதமாகப் பேசு, இல்லையென்று சாதி, விரோதித்து தூஷி, விரோதி என்ற சத்தமிடு, எதிர்த்துப்பேசு (contradicters of truth) "gainsayer" (தீத்து 1:9; ரோமர் 10:21); "speak against" (லூக்கா 2:34; யோவான் 19:12; அப் 13:45; அப் 28:19-22); "answer again" (தீத்து 2:9); "contradict" (அப் 13:45); "deny" (லூக்கா 20:27).

எதிர்பேசுகிறவர்களின் சுபாவங்கள்

1. அடங்காதவர்கள். (Unruly) (தீத்து 1:10)
2. வீண்பேச்சுக்காரர் (Vain talkers) (தீத்து 1:10)
3. மனதை மயக்குகிறவர்கள். (Deceivers) (தீத்து 1:10)
4. முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப் போடுகிறவர்கள் (Subvert (overthrown) whole houses) (தீத்து 1:11; 2தீமோ 2:18)
5. தகாதவைகளை உபதேசிக்கிறவர்கள் (Teach false doctrines) (தீத்து 1:11)
6. இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்கள். (Greedy of money) (தீத்து 1:11; பிலி 1:21; பிலி 3:7)
7. ஒயாப்பொய்யர் (Liars) (தீத்து 1:12)
8. துஷ்டமிருகங்கள் (Evil beasts) (தீத்து 1:12)
9. பெருவயிற்றுச் சோம்பேறிகள் (Slow bellies) (தீத்து 1:12)
10. விசுவாசத்தில் பலவீனர். (Unsound in faith) (தீத்து 1:13)
11. கட்டுக்கதைகளை நம்புகிறவர்கள். (Consecrated to false doctrines (தீத்து 1:13)
12. மனுஷருடைய கற்பனைகளுக்குச் செவிகொடுக்கிறவர்கள். (Obey human commandments) (தீத்து 1:13; மத் 15)
13. சத்தியத்தை விட்டு விலகுகிறவர்கள். (Reject truth) (தீத்து 1:13; 2தீமோ 4:1-4)
14. அசுத்த முள்ளவர்களும், அவிசுவாசமுள்ளவர்களும். (Unclean and unbelieving) (தீத்து 1:15)
15. தேவனை அறிந்திருக் கிறோமென்று அறிக்கை மட்டும் பண்ணுகிறவர்கள். (Only profess godliness) (தீத்து 1:16; 2தீமோ 3)
16. அவர்களுடைய புத்தியும் மனசாட்சியும் அசுத்தமாயிருக்கிறது. (Defiled in mind and conscience) (தீத்து 1:15)

தீத்து - தொகுப்புரை

1 அதிகாரம்

17. தங்கள் ஜீவியத்திலும், நடத்தையிலும் தேவனை மறுதலிக்கிறார்கள். **(Deny God in life and conduct)** (தீத்து 1:16)

18. அருவருக்கப் படத்தக்கவர்கள். **(Abominable—unnatural in lusts)** (தீத்து 1:16)

19. தேவனுக்கும், சத்தியத்திற்கும் கீழ்ப்படியாதவர்கள். **(Disobedient to God and truth)** (தீத்து 1:16)

20. எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆகாதவர்கள். **(Reprobate to all good works)** (தீத்து 1:16)

III. ஊழியக்காரரிடம் இருக்கக்கூடாத பதினேழு குணங்கள் - (1:5-9; 1தீமோ 3)

தீத்து 1:10 அநேகர், விசேஷமாய் விருத்த சேதனமுள்ளவர்கள், அடங்காத வர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயிருக்கிறார்கள்.

தீத்து 1:11 அவர்களுடைய வாயை அடக்க வேண்டும்; அவர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து, முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப் போடுகிறார்கள்.

தீத்து 1:12 கிரேத்தாதீவார் ஓயாப்பொய்யர், துஷ்டமிருகங்கள், பெருவயிற்றுச் சோம்பேறிகள் என்று அவர்களிலொருவனாகிய அவர்கள் தீர்க்கதரிசியானவனே சொல்லி யிருக்கிறான்.

தீத்து 1:13 இந்தச் சாட்சி உண்மையாயிருக்கிறது; இது முகாந்தரமாக, அவர்கள் யூதருடைய கட்டுக்கதைகளுக்கும், சத்தியத்தை விட்டு விலகுகிற மனுஷருடைய கற்பனைகளுக்கும் செவிகொடாமல்,

தீத்து 1:14 விசுவாசத்திலே ஆரோக்கியமுள்ளவர்களாகும்படி, நீ அவர்களைக் கண்டிப்பாய்க் கடிந்துகொள்.

தீத்து 1:15 சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்; அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாச முள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும்.

தீத்து 1:16 அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கை பண்ணுகிறார்கள், கிரியைகளினாலே அவரை மறுதலிக்கிறார்கள்; அவர்கள் அருவருக்கப் படத்தக்கவர்களும், கீழ்ப்படியாதவர்களும், எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆகாதவர்க ளுமாயிருக்கிறார்கள்.

"விருத்தசேதனமுள்ளவர்கள்" - நியாயப் பிரமாணத்தை உபதேசம் பண்ணும் யூதமார்க்கத்துப் போதகர்கள்.

"அவர்களுடைய வாயை அடக்க வேண்டும்" - யூதமார்க்கத்துப் போதகர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து, முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப் போடுகிறார்கள். ஆகையினால் அவர்களுடைய உபதேசம் பொய்யானது என்று வலியுறுத்திக் கூறுவது ஊழியக்காரர்களுடைய கடமையாகும்.

"அவர்கள் தீர்க்கதரிசியானவனே" - கி.மு. 538 ஆம் ஆண்டு வாழ்ந்த எபிமெனிடஸ் **(Epimenides)** என்ற தீர்க்கதரிசியை இந்த வாக்கியம் குறிக்கிறது. அவன் பல கவிதைகளை எழுதி அக்காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்து வந்தான்.

பெருவயிற்றுச் சோம்பேறிகள் **(slow bellies)** - **ἀργός** - **argos** - 692

பெயரடை - வீணான, சும்மா, சோம்பேறி, சோம்பலுள்ள **(idle)** (1தீமோ 5:13).

"சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்" - தேவன் சிருஷ்டித்த எல்லா மிருகங்களும் விசுவாசிகளுக்குப் புசிக்கத் தகுந்தவை. (ரோமர் 14; 1கொரி 8; 1தீமோ 4:4)

தீத்து - தொகுப்புரை

2 அதிகாரம்

IV. **ஊழியம் செய்யுமாறு கட்டளைகள்** - (2:1-3:14)

1. **தீத்துவிற்கு முப்பது கட்டளைகள்** - (2:1-10; 2தீமோ 1:6)

(1) **முதிர் வயதுள்ள புருஷர்களுக்கு உபதேசிக்க வேண்டிய காரியம்** - (எபே 5:25)

தீத்து 2:1 நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு.

தீத்து 2:2 முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும், நல்லொழுக்க முள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும் அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கிய முள்ளவர்களுமா யிருக்கும்படி புத்திசொல்லு.

"நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு" - தீத்து 1:10-16 ஆகிய வசனங்களில் யூதமார்க்கத்தாரைப் பற்றியும், அவர்களுடைய துர்உபதேசத்தைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. தீத்து அவர்களுக்கு எதிராக மெய்யான உபதேசங்களையும், ஆரோக்கியமான உபதேசத்துக் கேற்றவைகளையும் பேசவேண்டும்.

ஆரோக்கியமான உபதேசத்துக் கேற்றவைகளை யாரிடம் பேசவேண்டும்

1. முதிர்வயதுள்ள புருஷர்களிடம் (தீத்து 2:1-2)
2. முதிர்வயதுள்ள ஸ்திரீகளிடம் (தீத்து 2:3-4)
3. பாலிய ஸ்திரீகளிடம் (தீத்து 2:4-5)
4. வாலிப புருஷரிடம் (தீத்து 2:6-8)
5. வேலைக்காரரிடம் (தீத்து 2:9-10)
6. மனுஷரிடம் - கிருபையைக் குறித்து (தீத்து 2:11-12)
7. மனுஷரிடம் - சபை எடுத்துக் கொள்ளப் படுவதையும், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும் குறித்து (தீத்து 2:13)
8. மனுஷரிடம் - மீட்பைக் குறித்து (தீத்து 2:14-15)

முதிர்வயதுள்ள புருஷருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்க வேண்டும். **(Be sober)**
2. நல்லொழுக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும். **(Grave)**
3. ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். **(Temperate)**
4. விசுவாசத்தில் ஆரோக்கிய முள்ளவர்களாக இருக்க வேண்டும். **(Sound in faith)** (2தெச 3:2)
5. அன்பில் ஆரோக்கியமுள்ளவர்களாக இருக்க வேண்டும் **(Sound in love)** (1கொரி 13:4)
6. பொறுமையில் ஆரோக்கிய முள்ளவர்களாக இருக்க வேண்டும் **(Sound in patience)** (சங் 37:7)

தெளிந்த புத்தியுள்ளவராயிருப்பது **(Be sober)** - **νηφαλέος** - **neephaleos** - 3524

பெயரடை - தெளிந்த புத்தியுள்ள **(drinking no wine; sober) vigilant** (1தீமோ 3:2); **sober** (1தீமோ 3:11; தீத்து 2:2)

நல்லொழுக்கமுள்ள **(Grave)** - **σεμνός** - **semnos** – 4586

தீத்து - தொகுப்புரை

2 அதிகாரம்

பெயரடை - உண்மையுள்ள, நல்லொழுக்கமுள்ள **grave** (தீத்து 2:4; தீத்து 2:2) **honest** (பிலி 4:8)

ஜாக்கிரதையுள்ளவர் **(Temperate)** - **σώφρων** - **soophroon** - 4998

பெயரடை - தெளிந்த புத்தியுள்ள **(of sound mind; prudent; moderate; self-controlled) sober** (தீத்து 2:8; 1தீமோ 3:2); **temperate** (தீத்து 2:2); **discreet** (தீத்து 2:5)

(2) முதிர் வயதுள்ள ஸ்திரீகளுக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் - (எபே 5:22)

தீத்து 2:3 முதிர்வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே பரிசுத்தத்துக் கேற்றவிதமாய் நடக்கிறவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், மதுபானத்துக்கு அடிமைப் படாதவர்களுமாயிருக்கவும்,

முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. பரிசுத்தத்துக்கேற்ற விதமாய் நடக்கிறவர்களாய் இருக்க வேண்டும். **(Live holy)** (எபே 5:22-33; கொலோ 3:18; 1தீமோ 2:9-12; 1பேதுரு 3:1-6)
2. அவதூறுபண்ணாதவர்களாக இருக்க வேண்டும். **(Be not slanderers)**
3. மதுபானத்துக்கு அடிமைப் படாதவர்களாய் இருக்க வேண்டும். **(Not given to wine)**
4. நற்காரியங்களைப் போதிக் கிறவர்களாய் இருக்க வேண்டும். **(Be teachers of good things)** (தீத்து 2:3)
5. பாலிய ஸ்திரீகளுக்கு புத்தி சொல்லுகிறவர்களாய் இருக்க வேண்டும். **(Teach the young women)** (தீத்து 2:4)

அவதூறு செய்கிறவர் **(slanderer)** - **διάβολος** - **diabolos** - 1228

பெயரடை - பிசாசான, அவதூறு (செய்கிறவன்) (யோவான் 6:70)

(3) பாலிய ஸ்திரீகளுக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் - (1தீமோ 5:11; எபே 5:22)

தீத்து 2:4 தேவவசனம் தூஷிக்கப் படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும்,

தீத்து 2:5 தெளிந்த புத்தி யுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர் களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர் களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்திசொல்லு.

பாலிய ஸ்திரீகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். **(To be sober)** (1தீமோ 2:9).
2. தங்கள் புருஷரிடத்தில் அன்புள்ளவர்களாய் இருக்க வேண்டும். **(To love their husbands)**
3. தங்கள் பிள்ளைகளிடத்தில் அன்புள்ளவர்களாய் இருக்க வேண்டும். **(To love their children)**
4. தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். **(To be discreet)**

தீத்து - தொகுப்புரை

2 அதிகாரம்

5. கற்புள்ளவர்களாக இருக்க வேண்டும். **(To be chaste)**

6. வீட்டில் தரித்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும். **(To be homemakers)**

7. நல்லவர்களாக இருக்க வேண்டும். **(To be good)**

8. தங்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படிகிறவர்களாக இருக்க வேண்டும். **(To be obedient to their husbands)** (எபே 5:22,33; கொலோ 3:18; 1பேதுரு 3:1-6).

தெளிந்த புத்தியுள்ளவர் **(prudent)** - **σώφρων** - **soophroon** - 4998

பெயரடை - தெளிந்த புத்தியுள்ள **(of sound mind; prudent; moderate; self-controlled) sober** (தீத்து 2:8; 1தீமோ 3:2); **temperate** (தீத்து 2:2); **discreet** (தீத்து 2:5).

கற்புள்ளவர் **(chaste)** - **ἁγνός** - **hagnos** - 53

பெயரடை - சுத்த, கற்புள்ள (2கொரி 7:11; 2கொரி 11:2; பிலி 4:8; 1தீமோ 5:22; தீத்து 2:4, யாக் 3:17; 1பேதுரு 3:2; 1யோவான் 3:3)

(அ) நபர்கள் 2கொரி. 7:11; 11:12

(ஆ) பொருட்கள் பிலி. 4:28; யாக். 3:17

வீட்டில் தரித்திருக்கிறவர் **(homemakers)** - **οἰκο υργός** - **oikourgos** - 3626

பெயரடை - தரித்திருக்கிற **(caring for and working at home)**

நல்லவர் (good) - **ἀγαθός** - agathos - 18

பெயரடை - நல்லவர். சரீரப் பிரகாரமாகவோ அல்லது ஆன்மீகப் பிரகாரமாகவோ நன்றாக இருப்பவரைக் குறிப்பிடும் **(virtuous)** (தீத்து 2:5).

(அ) பரிபூரணமாக இருக்கும் தேவன் தம்மை நல்லவர் என்று குறிப்பிட்டுள்ளார். மாற்கு 10:18

(ஆ) நல்லோர் - இவர்கள் தீயோருக்கு எதிர்ப்பதமாக இருப்பவர்கள். மத். 5:45, 22:10.

(இ) நல்ல நிலம் - லூக். 8:8 நல்ல மரம் மத். 7:17.

(ஈ) தன்னிலை பெயர்ச்சொல் - நன்மை செய்கிறவன். ரோம. 2:10 நன்மைக்கேதுவாக நடப்பது ரோம. 8:28 பால் வேறுபாடற்ற பன்மைச் சொல். நன்மைகள் லூக். 1:53 நன்மையான எந்த ஈவும் யாக். 1:17

(4) பாலிய புருஷருக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் - (எபே 5:25; 2தீமோ 2:6)

தீத்து 2:6 அப்படியே, பாலிய புருஷரும் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்கவும் நீ புத்திசொல்லி,

தீத்து 2:7 நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து,

தீத்து 2:8 எதிரியானவன் உங்களைக்குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்க முள்ளவனும் குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக.

2 அதிகாரம்

பாலிய புருஷருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும். (To be sober minded)
2. நற்கிரியைகளுக்கு மாதிரியாக இருக்க வேண்டும். (To be a pattern of good works)
3. உபதேசத்திலே விகற்பமில்லாதவர் களாகவும், நல்லொழுக்கமுள்ளவர் களாகவும், குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவர்களாகவும் இருக்க வேண்டும். (To be uncorrupt, grave, and sincere in teaching) (தீத்து 2:8).
4. எதிரியானவன் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்று மில்லாதவர்களாக இருக்க வேண்டும். (To have sound speech that cannot be condemned) (தீத்து 2:8).

தெளிந்த புத்தியுள்ளவர் (sober minded) - σωφρονέω - soophroneoo - 4993

வினைச்சொல் - புத்தி தெளிந்திரு, தெளிந்த எண்ணம், தெளிந்த புத்தி, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிரு (sober in mind) (தீத்து 2:6; மாற்கு 5:15; லூக்கா 8:35; 2கொரி 5:13; ரோமர் 12:3; 1பேதுரு 4:7).

மாதிரி (pattern) - τυπικῶς - typikoos - 5179

ஆண்பால் பெயர்ச்சொல் - சொரூபம், மாதிரிரூபம், திருஷ்டாந்தம் (பிலி 3:17)

ஆரோக்கியமான (healing) - ὑγιής - hygiees - 5199

பெயரடை - சொஸ்தமான, சுகமான, ஆரோக்கியமான sound (தீத்து 2:8) whole (மத் 12:13; மத் 15:31; மாற்கு 3:5 மாற்கு 5:34; லூக்கா 6:10; யோவான் 5:4-15; யோவான் 7:23; அப் 4:10). ஆரோக்கியம் என்பது ஆவிக்குரிய ஆரோக்கியத்தையும், சரீர ஆரோக்கியத்தையும் குறிக்கும். (மத் 8:17; 1பேதுரு 2:24; யாக் 5:14).

(5) வேலைக்காரருக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் - (எபே 6:5)

தீத்து 2:9 வேலைக்காரர் நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரிக்கத்தக்கதாக,

தீத்து 2:10 தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருந்து எதிர்த்துப்பேசாமல், எல்லாவற்றிலும் பிரியமுண்டாக நடந்து கொள்ளவும், திருடாமலிருந்து, சகலவிதத்திலும் நல்லுண்மையைக் காண்பிக்கவும் புத்தி சொல்லு.

வேலைக்காரருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். (Be obedient) (எபே 6:5)
2. எல்லாவற்றிலும் பிரியமுண்டாக நடந்து கொள்ள வேண்டும். (Please masters in all things) (தீத்து 2:9).
3. தங்கள் எஜமான்களுக்கு எதிர்த்துப் பேசாமல் இருக்க வேண்டும். (Do not contradict or gainsay orders)
4. திருடாமலிருக்க வேண்டும். (Do not steal the goods of the master entrusted to you) (தீத்து 2:10; அப் 5:2-3)

2 அதிகாரம்

5. சகலவிதத்திலும் நல்லுண்மையைக் காண்பிக்க வேண்டும். **(Show faithfulness in all things)** (தீத்து 2:10).

2. சுவிசேஷத்திற்கு எல்லா மனுஷரும் கீழ்ப்படிய வேண்டும் - தேவகிருபையைக் குறித்து பத்து உபதேசங்கள்

தீத்து 2:11 ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி,

தீத்து 2:12 நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி,

தீத்து 2:13 நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.

தேவகிருபையின் ஆசீர்வாதங்கள்

1. இரட்சிப்பை அளிக்கிறது. (தீத்து 2:11; எபே 2:8-9).
2. எல்லா மனுஷருக்கும் பிரசன்னமாகியிருக்கிறது. (தீத்து 2:11; யோவான் 3:16; வெளி 22:17).
3. மனுஷருக்குப் போதிக்கிறது.

தேவகிருபை மனுஷருக்குப் போதிக்கும் காரியங்கள்

1. அவபக்தியை வெறுக்க வேண்டும். (தீத்து 2:12).
2. லௌகிக இச்சைகளை வெறுக்க வேண்டும். (தீத்து 2:12).
3. தெளிந்த புத்தியுள்ளவர்களாக ஜீவனம் பண்ண வேண்டும். (தீத்து 2:12; தீத்து 1:8; தீத்து 2:2-7).
4. நீதியுள்ளவர்களாக ஜீவனம் பண்ண வேண்டும். (தீத்து 2:12; எபி 12:14; ரோமர் 6:14-23; ரோமர் 8:12-13).
5. தேவபக்தியுள்ளவர்களாக ஜீவனம் பண்ண வேண்டும். (தீத்து 2:12; 2தீமோ 3:12).
6. இந்த ஜீவியத்தில் நேர்மையாக ஜீவனம் பண்ண வேண்டும். (தீத்து 2:12).
7. சபை எடுத்துக் கொள்ளப்படுவதையும், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும் எதிர்பார்க்க வேண்டும். (தீத்து 2:13; பிலி 3:20).

போதித்தல் (Teaching) - παιδεύω - **paideuoo** - 3811

வினைச்சொல் - தண்டி, கற்பிக்கப்படு, போதிக்கப்படு, உபதேசி **(instruction as to children)** (2தீமோ 2:25).

தீர்க்கதரிசன எண் - 1

"நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது". (தீத்து 2:13) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. சபை எடுத்துக் கொள்ளப்படுவதற்காக ஜனங்கள் அந்நாளில் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். சபை எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும் என்று ஒரு குறிப்பிட்ட நாளோ, நேரமோ வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட வில்லை. (தீத்து 2:12; பிலி 3:20).

தீத்து - தொகுப்புரை

2 அதிகாரம்

3. கிறிஸ்துவின் ஊழியத்தின் நோக்கம் - (யோவான் 9:39)

தீத்து 2:14 அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்.

கிறிஸ்துவின் மரணத்தினால் தேவ ஜனத்திற்குக் கிடைக்கும் சிலாக்கியங்கள்

1. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டார். (மத் 26:28; கொலோ 1:14-22; வெளி 1:5)
2. தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரித்தார். கலா 3:14)

4. தீத்துவிற்கு பத்து கட்டளைகள் - (2:1; 3:8; 2தீமோ 1:6)

தீத்து 2:15 இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள். ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடாதிருப்பாயாக.

அப்போஸ்தலர் பவுல் தீத்துவிற்குக் கூறியிருக்கும் புத்திமதிகள்

1. இவைகளை நீ பேச வேண்டும்.
2. இவைகளை நீ போதிக்க வேண்டும்.
3. சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள்ள வேண்டும்.
4. ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடுக்கக்கூடாது.

தீத்து - தொகுப்புரை

3 அதிகாரம்

5. பாவிகளின் ஒன்பது அம்ச விளக்கம்

தீத்து 3:1 துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கவும், சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கவும்,

தீத்து 3:2 ஒருவனையும் தூஷியாமலும், சண்டைபண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு.

கிரேத்தா தீவாருக்குக் கூறப்படவேண்டிய செய்திகள்

1. துரைத்தனங்களுக்கு கீழ்ப்படிந்து அடங்கியிருக்க வேண்டும். தீத்து 3:1; ரோமர் 13:1-8; 1பேதுரு 2:13-18).
2. அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்கியிருக்க வேண்டும் தீத்து 3:1; ரோமர் 13:1-8).
3. சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும். (தீத்து 3:1).
4. ஒருவனையும் தூஷிக்கக் கூடாது. (தீத்து 3:2; யாக் 3).
5. சண்டைபண்ணாமலிருக்க வேண்டும். (தீத்து 3:2; 1தீமோ 3:3).
6. பொறுமையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். (தீத்து 3:2; பிலி 4:5).
7. எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்க வேண்டும். (கலா 5:22-23).

6. மனுஷர் ஏன் எவ்வாறு இரட்சிக்கப் படுகிறார்கள்

தீத்து 3:3 ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம் பண்ணுகிறவர்களும், பகைக்கப் படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம்.

தீத்து 3:4 நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது,

தீத்து 3:5 நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.

தீத்து 3:6 தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின் படி சுதந்தரராகத்தக்கதாக,

தீத்து 3:7 அவர் நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்.

பாவிகளுடைய குணங்கள்

1. புத்தியீனர். (Foolish)
2. கீழ்ப்படியாதவர்கள் (Disobedient) (தீத்து 3:3; எபே 2:1-3)
3. வழிதப்பி நடக்கிறவர்கள் (Deceived) (தீத்து 3:3; 2கொரி 4:4; வெளி 12:9)
4. பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்கள். (Serving divers lusts and pleasures) (தீத்து 3:3; கலா 5:19-21; எபே 2:1-3)

3 அதிகாரம்

5. துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம்பண்ணுகிறவர்கள். **(Living in malice and envy)** (தீத்து 3:3)

6. பகைக்கப்படத்தக்கவர்கள். **(Hateful)** (தீத்து 3:3)

7. ஒருவரையொருவர் பகைக்கிறவர்கள். **(Hating one another)** (தீத்து 3:3)

புத்தியீனர் **(Foolish)** - ἀνόητος - **anoeetos** - 453

பெயரடை - புத்தியில்லாத, மூடமான, புத்தியீனமான, மதிக்கேடான **foolish** (தீத்து 3:3; கலா 3:1,3; 1தீமோ 6:9); **unwise** (ரோமர் 1:14); **fool** (லூக்கா 24:25)

ஆத்தும இரட்சிப்பின் அம்சங்கள்

1. தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமாதல். (தீத்து 3:4)

2. மனுஷர் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சிக்கவில்லை. (தீத்து 3:5; எபே 2:8-9)

3. தமது இரக்கத்தின் படியே அவர் நம்மை இரட்சித்தார். (தீத்து 3:5).

4. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலும், வார்த்தையினாலும் நம்மைக் கழுவினார். (தீத்து 3:5; மத் 26:28; எபே 5:26; கொலோ 1:14-22; 1பேதுரு 1:18-23; யாக் 1:18)

5. பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினால் அவர் நம்மை இரட்சித்தார். (தீத்து 3:5; யோவான் 3:5; எபே 4:24; ரோமர் 12:2)

6. நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார். (தீத்து 3:7; ரோமர் 5:5; ரோமர் 8:14-16; 2கொரி 12:13)

7. தேவனுடைய கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின் படி சுதந்தரராக்கப் பட்டோம். (தீத்து 3:6; ரோமர் 3:24-31; ரோமர் 5:1-11; எபே 2:8-9)

"நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கை" - (தீத்து 1:2; யோவான் 6:27)

பொழிந்தருளுதல் **(shed on)** - ἐκχέω - **ekcheoo** - 1632

வினைச்சொல் - சிந்து, கொட்டு, ஊற்று, பொழி, சரிந்துபோ **(to pour forth; bestow; to gush out; run greedily out; shed abroad; to spill out freely)** (தீத்து 3:6; யோவான் 7:37-39; அப் 2:16-21,33; அப் 10:45; யூதா 2:28-29).

சம்பூரணம் **(abundantly)** - πλουσίως - **plousioos** - 4146

வினையடை - பரிபூரணமாய், சம்பூரணமாய் (தீத்து 3:6; கொலோ 3:16; 1தீமோ 6:17; 2பேதுரு 1:11).

7. தீத்துவிற்கு எட்டு கட்டளைகள் - (2:1,15; 2தீமோ 1:6)

தீத்து 3:8 இந்த வார்த்தை உண்மையுள்ளது; தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவைகளைக்குறித்துத் திட்டமாய்ப் போதிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்; இவைகளே நன்மையும் மனுஷருக்குப் பிரயோஜனமுமானவைகள்.

தீத்து - தொகுப்புரை

3 அதிகாரம்

தீத்து 3:9 புத்தியீனமான தர்க்கங்களையும், வம்ச வரலாறுகளையும், சண்டைகளையும், நியாயப் பிரமாணத்தைக்குறித்து உண்டாகிற வாக்குவாதங்களையும் விட்டு விலகு; அவைகள் அப்பிரயோஜனமும் வீணுமாயிருக்கும்.

தீத்து 3:10 வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனைவிட்டு விலகு.

தீத்து 3:11 அப்படிப்பட்டவன் நிலைதவறி, தன்னிலேதானே ஆக்கினைத் தீர்ப்புடையவனாய்ப் பாவஞ்செய்கிற வனென்று அறிந்திருக்கிறாயே.

தீத்து 3:12 நான் அர்த்தெமாவையாவது தீகிக்குவையாவது உன்னிடத்தில் அனுப்பும் போது நீ நிக்கொப்போலிக்கு என்னிடத்தில் வர ஜாக்கிரதைப்படு; மாரிகாலத்திலே அங்கே தங்கும்படி தீர்மானித்திருக்கிறேன்.

தீத்து 3:13 நியாயசாஸ்திரியாகிய சேனாவுக்கும் அப்பொல்லோவுக்கும் ஒரு குறைவுமில்லாதபடிக்கு அவர்களை ஜாக்கிரதையாய் விசாரித்து வழிவிட்டனுப்பு.

தீத்து 3:14 நம்முடையவர்களும் கனியற்றவர் களாயிராதபடி குறைவுகளை நீக்குகிறதற்கேதுவாக நற்கிரியைகளைச் செய்யப் பழகட்டும்.

"இந்த வார்த்தை உண்மையுள்ளது" - (1தீமோ 1:15)

"திட்டமாய்ப் போதிக்க வேண்டும்" - (1தீமோ 1:7) நாம் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். (தீத்து 3:8,14; தீத்து 2:14; 2தீமோ 2:21; மத் 5:16).

"புத்தியீனமான தர்க்கங்களை.....விட்டு விலகு" - (1தீமோ 1:4)

அப்பிரயோஜனமும் வீணுமாயிருக்கும் காரியங்கள்

1. புத்தியீனமான தர்க்கங்கள்
2. வம்சவரலாறுகள்
3. சண்டைகள்
4. நியாயப்பிரமாணத்தைக் குறித்து உண்டாகிற வாக்குவாதங்கள்

வேதப்புரட்டன் (heretick) - αἱρετικός - hairetikos - 141

பெயரடை - வேதப்புரட்டன் (one who maintains opposition to truth) (அப் 5:17)

விலகு (reject) - παραιτέομαι - paraiteomai - 3868

வினைச்சொல் - மன்னி, விலக்கு, வேண்டிக்கொள் (beg off) "reject" (தீத்து 3:10); "avoid" (2தீமோ 2:23); "entreat" (எபி 12:19); "make excuse" (லூக்கா 14:18); "refuse" (அப் 25:11; 1தீமோ 4:7; 1தீமோ 5:11; எபி 12:25).

வேதப்புரட்டினால் உண்டாகும் விளைவுகள்

1. நிலைதவறுதல்
2. பாவம் செய்தல்
3. தன்னிலேதானே ஆக்கினைத் தீர்ப்படைதல்.

பாவம் (Sin) - ἁμαρτάνω - hamartanoo – 264

தீத்து - தொகுப்புரை

3 அதிகாரம்

வினைச்சொல் - குற்றம் செய், பாவஞ்செய், பெற்றுக்கொள்ளத் தவறு, நியதியின் படி நடக்கத்தவறு **(miss a mark or aim; to wander from the right path that leads to life; go in the path of destruction) "sin"** (தீத்து 3:11; மத் 18:21; மத் 27:4; லூக்கா 15:18-21; யோவான் 5:14; யோவான் 8:11; யோவான் 9:2-3; ரோமர் 2:12; ரோமர் 3:23; ரோமர் 5:12-16; ரோமர் 6:15; 1கொரி 6:18; 1கொரி 7:28,36; 1கொரி 8:12; 1கொரி 15:34; எபே 4:26; 1தீமோ 5:20; எபி 3:17; எபி 10:26; 2பேதுரு 2:4; 1யோவான் 1:10; 1யோவான் 2:1; 1யோவான் 3:6-9; 1யோவான் 5:16-18); **"to trespass"** (மத் 18:15; லூக்கா 17:3-4); **"offend"** (அப் 25:8); **"faults"** (1பேதுரு 2:20)

(அ) சட்டப்பிரகாரமாக தவறு செய்தல் (அப். 25:8) ஆன்மீகபிரகாரமாக தவறு செய்தல் (ரோம. 3:23, 5:12)

(ஆ) நீதி நெறிக்குப் புறம்பாகத் தவறு செய்தல்; ஒருவருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தல் (1கொரி. 6:18) மனிதர்கள் மத்தியில் தவறு செய்தல் (18:15)

(இ) தேவனுடைய சித்தத்தை மீறுதல். அதிலும் சிறப்பாக தேவன் வெளிப்படுத்தியுள்ள சித்தத்தை மீறி, அவருக்கு எதிராக பாவஞ்செய்தல் (மத். 27:2)

"அர்த்தெமா" **(Artemas)** - இவனைப் பற்றிய குறிப்பு வேறு வசனங்களில் காணப்படவில்லை.

"தீகிக்கு" **(Tychicus)** - (அப் 20:4)

"நிக்கொப்போலி" **(Nicopolis)** - எபீரேசின் **(Epirus)** பட்டணம். இது அம்ராசியா **(Ambracia)** வளைகுடாவில் அக்தியத்திற்கு **(Actium)** அருகில் உள்ளது. நிக்கொப்போலி என்னும் பெயரில் வேறொரு பட்டணம் துரோவாவில் **(Thrace)** நேசஸ் **(Nessus)** நதிக்கரையில் அமைந்திருக்கிறது.

"மாரிகாலத்திலே அங்கே தங்கும்படி தீர்மானித்திருக்கிறேன்" - பவுல் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப் பட்டிருக்கிறார். தனக்குப் பிரியமான இடத்தில் மாரிகாலத்தில் தங்கியிருக்க விரும்புகிறார்.

"சேனா" **(Zenas)** - இவனைப் பற்றிய குறிப்பு வேறு வசனங்களில் காணப்படவில்லை.

"அப்பொல்லோ" **(Apollos)** - (அப் 18:24)

8. முடிவுரையும் ஆசீர்வாதமும்

தீத்து 3:15 என்னோடிருக்கிற யாவரும் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். விசுவாசத்திலே நம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லு. கிருபையானது உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.